பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 06 2025 **SUNDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. சைப்ரஸில் தாம் மேற்கொண்டுள்ள அரசுமுறைப் பயணம் அந்நாட்டுடனான உறவை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தீவிரவாத செயல்களுக்கு ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. லடாக் யூனியன் பிரதேசத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. விண்வெளித் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு துணிச்சலான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. **Hulencourt** ஓப்பன் கோல்ஃப் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Avani Prashant** கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

**>>>>>>><<<<<<<**

சைப்ரஸில் தாம் மேற்கொண்டுள்ள அரசுமுறைப் பயணம் அந்நாட்டுடனான உறவை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக அந்நாட்டிற்கு சென்ற பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

விமான நிலையத்தில் தம்மை வரவேற்றதற்காக சைப்ரஸ் அதிபர் திரு. **Nikos Christodoulides** –க்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து அந்நாட்டு அதிபருடன் தாம் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதன் பின்னர், **Lemesos** சென்ற திரு. நரேந்திர மோடிக்கு இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து, இந்தியா மற்றும் சைப்ரஸ் தொழிலதிபர்கள் மாநாட்டில், அந்நாட்டு அதிபருடன் இணைந்து பிரதமர் பங்கேற்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சைப்ரஸ் அதிபர் இடையேயான பேச்சுக்கள் நாளை நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

இதன் பின்னர், சைப்ரஸில் தமது அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு கனடா புறப்பட்டுச் செல்கிறார்.

அங்கு நடைபெறும் ஜி.7 உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்வுள்ளார்.

**>>>>>>><<<<<<<**

தீவிரவாத செயல்களுக்கு ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

உத்தரபிரதேசத்தின் லக்னோவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

காங்கிரஸ் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, தீவிரவாதத்தை கட்டுப்படுத்த தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தீவிரவாத செயல்களுக்கு உடனுக்குடன் பதிலடி கொடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நக்ஸலைட்டு பிரச்சினையால் 11 மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது 3 மாவட்டங்களில் மட்டுமே இப்பிரச்சினை உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா உறுதிபடக் கூறினார்.

>>>>>>><<<<<<<

இதற்கிடையே, ஆப்பரேஷன் சிந்தூரின் வெற்றியை கொண்டாடும் வகையில் பாதுகாப்புப் படையினருக்கு பொதுமக்கள் அளித்த ஆதரவுக்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாக ராணுவம் கூறியுள்ளது.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள ராணுவம், இதுதொடர்பாக பொதுமக்கள் எழுதிய கடிதங்களின் தொகுப்பினையும் பகிர்ந்துள்ளது.

நாட்டு நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் பணி தொடரும் என்றும் ராணுவம் அதில் குறிப்பிட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி 17 புள்ளி ஒன்று மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் காற்றாலை மின்உற்பத்தி மட்டும் 10 புள்ளி ஐந்து சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சூரிய மின்சக்தி பயன்பாடும் அதிகரித்து வருவதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

விண்வெளித் துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு துணிச்சலான முடிவுகளை மேற்கொண்டதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விண்வெளித் துறையில் தனியார் பங்களிப்பிற்கு அனுமதி அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, விண்வெளித் துறை சார்ந்த பொருளாதாரம் நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>>><<<<<<<

அஹமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ருபானியின் இறுதிச் சடங்குகள் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காந்திநகரில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அம் மாநில அமைச்சர் திரு. ருஷிகேஷ் பாட்டேல், விஜய் ருபானியின் உடலை அவரது உறவினர்கள் நாளை காலை 11.30 மணியளவில் மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொள்ளவுள்ளதாக கூறினார்.

இதன்பின்னர் விஜய் ருபானியின் உடல் ராஜ்கோட்டிற்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு முழுஅரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் இதுவரை 45 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக திரு. ருஷிகேஷ் பாட்டேல் கூறினார்.

இதற்கிடையே, விமான விபத்து நடந்த இடத்தை பிரதமரின் முதன்மைச் செயலர் திரு. பி.கே. மிஸ்ரா இன்று பார்வையிட்டார்.

அங்கு நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு காஷ்மீரில் செயல்படும் தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணி, அந்த யூனியன் பிரதேசத்தின் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் வகையிலான நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ வலியுறுத்தியுள்ளார்.

இன்று ஸ்ரீநகரில் தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

உள்ளூர் மொழிகளுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உள்ளூர் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. சஞ்சய் ஜாஜூ கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக புதுச்சேரி சென்றடைந்தார்.

விமான நிலையத்தில், புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரெங்கசாமி மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் குடியரசு துணைத்தலைவரை வரவேற்றனர்.

நாளை, ஜிப்மரில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், மாணவர்களுடனும் கலந்துரையாடுகிறார்.

இதன் காரணமாக அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

லடாக் யூனியன் பிரதேசத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

லே-யில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

லடாக்கின் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

>>>>>>><<<<<<<

மஹாராஷ்ட்ராவில் **Indrayani** ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பழைய பாலம் இடிந்து விழுந்ததில், 2 பேர் உயிரிழந்தனர், 32 பேர் காயமடைந்தனர்.

பூனே அருகே தொடர்மழை காரணமாக இந்தப் பாலம் இடிந்து விபத்துக்குள்ளானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக, அந்த பாலத்தில் நின்று கொண்டிருந்த சுற்றுலா பயணிகள் ஆற்றில் விழுந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

முதல்கட்ட தகவலின் அடிப்படையில் இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்திருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

இதுவரை 6 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்த 32 பேரில் 6 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

இதற்கிடையே, மஹாராஷ்ட்ராவின் ரத்னகிரி மற்றும் ராய்காட் மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

>>>>>>><<<<<<<

சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஹரியானாவின் குருஷேத்ராவில் யோகா விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை அம்மாநில முதலமைச்சர் திரு. **Nayab Singh Saini** இன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப் பொருளை தவிர்த்து யோகா பயிற்சியை மேற்கொள்வோம் என்ற உறுதிமொழி இன்று செய்து வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

வரும் 21ஆம் தேதி மிகப் பெரிய அளவிலான யோகா முகாம் குருஷேத்ராவில் நடத்தப்படவுள்ளதாகவும் திரு. **Nayab Singh Saini** கூறினார்.

>>>>>>><<<<<<<

தெலங்கானாவில் உள்ளாட்சித் தேர்தலுக்கான அட்டவணை இம்மாத இறுதிக்குள் வெளியிட வாய்ப்புள்ளதாக அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. சீனிவாச ரெட்டி தெரிவித்துள்ளார்.

இன்று ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்து விவாதிப்பதற்காக, மாநில அமைச்சரவை கூட்டம் நாளை நடைபெறவுள்ளதாக கூறினார்.

இதற்கிடையே, காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்ற 18 மாதங்களுக்குப் பின்னரும் கூட உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

>>>>>>><<<<<<<

ஈரான் - இஸ்ரேல் இடையேயான மோதல் தீவிரமடைந்துள்ளது.

ஈரான், இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் டெஹ்ரானின் எண்ணெய் கிடங்கை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதன் காரணமாக, அப்பகுதி தீப்பற்றி எரிவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி, தற்போது வரை தங்கள் நாட்டின் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் 300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக இஸ்ரேல் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

இதற்கிடையே, ஈரானில் உள்ள இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையேயான மோதலை அடுத்து வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் உள்ள இந்திய தூதரக சமூகவலைதளப் பக்கங்களை பின்தொடருமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவசர தேவைகளுக்கு

9 1 2 8 1 0 9 1 1 5,

9 1 2 8 1 0 9 1 0 9 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**>>>>>>><<<<<<<**

பெல்ஜியத்தில் நடைபெற்று வரும் **Hulencourt** ஓப்பன் கோல்ஃப் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Avani Prashant** கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

**>>>>>>><<<<<<<**

தாய்லாந்து பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நித்யஸ்ரீ சுமதி சிவன் தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 21-11, 17-21, 21-11 என்ற செட்கணக்கில் போலந்தின் **Oliwia Szmigiel-**ஐ வென்றார்.

**>>>>>>><<<<<<<**

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

**>>>>>>>END<<<<<<<**